FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301637

1. District : மதுரை மாவட்டம் PS: மே. மு.க. பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No: 15/2026 முத.அ. எண் Date: 24-09-26 நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7, 7A of PC Act
(ii) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: 1988 as amended by
(iii) Act சட்டம்: (amendment) Act 2018 Sections பிரிவுகள்: PC (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 23-09-26 Date to : நாள் வரை 24-09-26
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 22.20 hrs Time to : நேரம் வரை 04.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24-09-26 Time : நேரம் 15.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24-09-26 Time : நேரம் 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கூட்டுச் செய்யப்பட்ட புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தூரம் 40 km தென் மேற்கு, திருப்புவனம் குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் கள்ளிக்குடி மதுரை சாலை
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : திரு. R. வீரசெல்வன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : [illegible] தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 55/26 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : மாவட்ட அரசு தொழில் மே அரசு ஊழியர் (g) Address : மாவட்ட அரசு அலுவலகம், பணிபுரி முகவரி [illegible] அரசு அலுவலகம் மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1). திரு. A. [illegible] வ/ 34/26 W/o தினகரன் உதவியாளர் (பொறுப்பு) திருப்புவனம் காவல்நிலையம், கள்ளிக்குடி மதுரை என்கிற மேலும் இரண்டு நபர்கள் சேர்ந்தால் இணைக்கப்படுகிறது. (இணைப்பு-I)

8. Reasons for delay in reporting by the complainant / Informant : குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது பக்கம் 3 முதல் 10 வரை

—

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed PM. Ramesh Babu, Insp. of Police, Rank ....., to take up the Investigation / Refused Investigation / transferred to PS. V&AC, Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது /, மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/09/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

N. Bharathi Priya 24-9-26

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court 24-09-26 17.40 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: Qual N. Bharathi Priya
Rank: நிலை Insp. of Police
V&AC, Madurai

இணைப்பு - I

குற்றவாளிகள்

A-2 திரு. R. தனசேகரன், வயது 50/2026,
த/பெ. ராமராஜ்,
ஆவண எழுத்தர் உதவியாளர்,
வேதா அஸோசியட்ஸ், ரயில்வே பீடர் ரோடு,
கள்ளிக்குடி, மதுரை மாவட்டம். (**தனி நபர்**)

A-3 திரு. P. சிவபெருமாள், வயது 54/2026,
த/பெ. பெருமாள்,
முதுநிலை வருவாய் ஆய்வாளர் (நில எடுப்பு),
சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியரகம்,
மதுரை.

24-9-26

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை

இணைப்பு - II

Honoured Sir,

Submitted,

இன்று 24.09.2026-ம் தேதி மாலை 15.30 மணிக்கு, காவல் ஆய்வாளர் நீ. பாரதிபிரியா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு. R. வீரசெழியன் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை மாவட்டம் கள்ளிக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 23.09.2026, திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.13,88,710/-, கைப்பற்றப்பட்ட 12 பதிவேடுகள், மற்றும் சார் பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட எழுதப்பட்ட தாள் ஒன்றும் மற்றும் ஒரு எழுதப்பட்ட துண்டு சீட்டும் மற்றும் மேற்படி திடீர் இணை ஆய்வின் போது அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார்-பதிவாளர் திருமதி. A.ராஜேஸ்வரி, உதவியாளர், வருவாய்த்துறை முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.சிவபெருமாள் மற்றும் தனிநபர்கள் வீரமணி, தனசேகரன், ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.R.வீரசெழியன், த/பெ. ராமராஜ், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை பெறுநர்காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை.ந.க.எண். 48/ 2026/ I2, நாள்: 24.09.2026 அய்யா,பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பத்திரபதிவு துறை - கல்லிக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பொருப்பு சார் பதிவாளர் அலுவலராக பணிபுரியும் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் அவர்களது ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் மூலமாக லஞ்சம் கேட்டு வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று 23.09.2026-ம் தேதி திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.13,88,710/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 23.09.2026-ம் தேதியன்று மாலை 17:00 மணியளவில், மதுரை மாவட்டம், கள்ளிக்குடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் அவர்களது ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் மூலமாக லஞ்சம் கேட்டு வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், மதுரை ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. பாரதிபிரியா அவர்கள் மாலை சுமார் 17.00 மணிக்கு என்னிடம் தெரிவித்தார்கள். பின்னர், அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து அதனை உறுதி செய்துவிட்டு, மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள முடிவு செய்து, மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு மாலை 17.45 மணிக்கு வந்தேன் பின்பு, நான் அழைத்ததின் பேரில், காவல் ஆய்வாளர்கள் திருமதி. பாரதிபிரியா, திரு.குமரகுரு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் மதுரை ஊ.த.க பிரிவு அலுவலகத்தில் இருந்து அரசு காவல் வாகனம் TN 22 G 7007-ல் புறப்பட்டு, இரவு சுமார் 19.15 மணியளவில் கள்ளிக்குடி சார் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள கள்ளிக்குடி ரயில்வே பீடர் ரோட்டில் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் எதிரிலும், கள்ளிக்குடி ரயில் நிலையம் அருகிலும் நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டோம். அப்பொழுது, மேற்படி அலுவலகம் பரபரப்பாக காணப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்தில் ஆவணங்களை பதிவு செய்ததற்காக ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள் மேற்படி அலுவலகத்தில் கேமரா ஆப்பரேட்டராக பணிபுரியும் திரு.வீரமணி அவர்கள் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் உத்தரவின்படி லஞ்சப்பணத்தை பெற்று அதனை மேற்படி ராஜேஸ்வரி அவர்கள் மேற்படி அலுவலகத்தைவிட்டு பணிமுடித்து செல்லும்போது கொடுப்பார் என ரகசிய தகவல் கிடைக்கபெற்றது. அதன்காரணமாக மேற்படி சார்பதிவாளரின் அலுவலகத்தை சுற்றி ரகசியமாக கண்காணிக்கப்பட்டது. பின்னர், இரவு சுமார் 22.20 மணிக்கு மேற்படி வீரமணி அவர்கள் மேற்படி அலுவலகத்தைவிட்டு அவரது இருசக்கர வாகன எண். TN 58 CX 8037 Yamaha 125 Ray ZR-ல் புறப்பட்டு வந்தார். அவரை பின்தொடர்ந்து மேற்படி அலுவலகத்திற்குள் இருந்து வடக்கு நோக்கி மேற்படி பீடர் ரோட்டிற்கு வந்த TN 64 AH 7583 Mahindra 3XO கருப்பு நிற கார் ஆகியவை நிறுத்தப்பட்டு அவர்களிடம் நான் மேற்படி திரு.வீரமணி, மேற்படி காரில் பின்னால் இடதுபுறத்தில் அமர்ந்திருந்த திருமதி.ராஜேஸ்வரி, விசாரித்து தெரிந்து கொண்ட அவருக்கு முன்புறம் அமர்ந்திருந்த வருவாய் ஆய்வாளர் திரு.சிவபெருமாள் மற்றும் மேற்படி வாகனத்தை ஓட்டி வந்த ரியல் எஸ்டேட் புரோக்கர் திரு.தனசேகர் ஆகியோர்களிடம் என்னையும், என்னுடன் இருந்த மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர்கள் திருமதி.பாரதிபிரியா மற்றும் திரு.குமரகுரு மற்றும் காவல் ஆளிநர்களையும் அறிமுகப்படுத்தி கொண்டு அவர்களையும், அவர்கள் வந்த வாகனங்களையும் மற்றும் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தையும் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள வேண்டிய விபரத்தை கூறி அவர்களிடம் சம்மதம் பெறப்பட்டது. மேற்படி திருமதி.ராஜேஸ்வரி அவர்களை பற்றி விசாரித்த போது, அவர் அவரது பெயர் A. ராஜேஸ்வரி என்றும், அவர் மதுரை (தெற்கு) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளர் நிலையில் பொறுப்பு சார்பதிவாளராக கடந்த 03.08.2026-ம் தேதி முதல் பணிபுரிந்து

வருவதாகவும், அவருடன் காரில் அவருக்கு முன்பாக அமர்ந்திருப்பது மதுரை மாவட்டதில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் நில எடுப்பு பிரிவில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரியும் திரு.சிவபெருமாள் என்றும், அவருக்கு அருகில் டிரைவர் சீட்டில் அமர்ந்திருப்பவர் கள்ளிக்குடியில் உள்ள வேதா அஸோஸியேட் ஆவண எழுத்தர் திரு.விஜய் அவர்களின் உதவியாளர் திரு.தனசேகரன் என்றும், மேலும் மேற்படி இருசக்கர வாகனத்தில் இருந்தவர் வீரமணி என்றும், அவர் அவரது அலுவலகத்தில் IP Camera Operator ஆக பணிபுரிவதாகவும், மேலும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் பிற அலுவலர்களான இளநிலை உதவியாளர்கள் திரு.கார்த்திக், திரு.ரமேஷ், Data Entry Operator திருமதி.லாவண்யா ஆகியோர் பணி முடித்து வீட்டிற்கு புறப்பட்டு சென்றுவிட்டார்கள் என்றும் தெரிவித்தார். பின்னர், மேற்படி பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் மேற்படி காவல் ஆய்வாளர் திருமதி.பாரதிபிரியா அவர்கள் உதவியுடன் நான் அவரிடம் உள்ள பணம் சம்பந்தமாக கேட்டபோது, மேற்படி ராஜேஸ்வரி அவர்கள் அவரது மடியில் வைத்திருந்த கைப்பையில் இருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி வருவாய் ஆய்வாளர் அவரிடம் திரு.வீரசெழியன் அவரிடம் உள்ள பணத்தை பற்றி கேட்டபோது அவர் அவரது சட்டையின் இடதுபக்க பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.200/- ஐ எடுத்து என்னிடம் ஆஜர் செய்து அது அவரது செலவிற்காக வைத்துள்ள சொந்த பணம் என்று கூறி அதற்கு தகுந்த முகாந்திரம் கூறியதால் அந்த பணத்தை நான் அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். மேற்படி திரு.தனசேகரன் அவர்களை நான் விசாரிக்க, அவர் இந்த கார் வேதா அஸோஸியேட் உரிமையாளர் திரு.விஜய் அவர்களின் மனைவியின் பெயரில் உள்ளது என்றும், மேற்படி காரின் டிக்கியில் கத்தையாக பணம் சுமார் ரூ.12,00,000/- உள்ளதாக தெரிவித்து, மேற்படி காரின் டிக்கியை திறந்து அதன் வலதுபுறத்தில் இருந்த அருள்மிகு ஸ்ரீ உச்சம காளியம்மன் திருக்கோவில் என்ற பெயர் சிவப்பு நிறத்தில் பொறிக்கப்பட்ட மஞ்சள் நிற பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். நான் மேற்படி வீரமணியிடம் பணம் ஏதும் வைத்துள்ளீர்களா என்று விசாரித்தபோது அவர் அவரது பேண்டின் வலது பின் பாக்கெட்டில் வைத்திருந்த அவரது மணிபர்ஸை எடுத்து அதிலிருந்த ரூ.1,000/-த்தை எடுத்து காண்பித்து, அதற்கு சரியாக முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திருமதி. ராஜேஸ்வரி மற்றும் திரு.தனசேகரன் ஆகியோர்களிடம் உள்ள பணத்தை மேற்படி அலுவலகத்திற்குள் வைத்து எண்ணி பார்ப்பதற்காக மேற்படி அலுவலகத்திற்குள் நுழைந்து வலது பக்கத்தில் இருந்த டேபிளில் வைத்து பணம் எண்ணி பார்க்கப்பட்டது. மேற்படி ராஜேஸ்வரி அவர்கள் மேற்படி கைப்பையில் வைத்திருந்த பணத்தை எண்ணி பார்த்தபோது அதில் நான்கு கத்தைகளாக ஒரு கத்தையில் ரூ.50,000/-ம் (100 X 500), மற்றொரு கத்தையில் ரூ.50,000/-ம் (100 X 500), மற்றொரு கத்தையில் ரூ.76,000/-ம் (500 X 152) தனியாக ரூ.3,710/-ம் (500 X 1, 200 X 4, 100

X 24, 10 X 1) ஆக மொத்தம் ரூ.1,79,710/- காணப்பட்டது. மேலும் அவரது கைப்பையில் தனியாக ரூ.110/-ம் இருந்தது. அந்த ரூ.110/- அவரது சொந்தபணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். ஆனால் அவரது கைப்பையில் இருந்த பணம் ரூ.1,79,710/- பற்றி நான் திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் கேட்டபோது அந்த பணம் எப்படி தனது கைப்பையில் வந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். அதனால் அந்த பணம் ரூ.1,79,710/- லஞ்சபணம் எனக்கருதி சந்தேகத்தின் பேரில் நான் விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் அவரது கைப்பையில் ஒரு வெள்ளை தாளில் நேற்று, இன்று என எழுதப்பட்டு அதன்கீழ் 1 முதல் 16 வரிசை எண் குறிப்பிடப்பட்டு பெயர் எண்ணிக்கை மற்றும் தொகை குறிப்பிடப்பட்டு மொத்தம் 1,40,000 எனக்குறிப்பிட்டு தமிழ் வளர்ச்சிதுறை 1000 என எழுதப்பட்டு Total 1,39,000 என எழுதப்பட்ட தாழும் அதன்பின் பகுதியில் கொடுக்காதவர்கள் என எழுதப்பட்டு, அதன்கீழ் பகுதியில் பெயர் மற்றும் எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளதும் மற்றொரு துண்டுச்சீட்டில் 7 DOC 7 X 1000 = 7000, 1 Doc 1 X 30000 = 30,000, 37,000 என குறிப்பிடப்பட்டுள்ளதும், திருமதி.ராஜேஸ்வரி அவர்களின் கைப்பையில் காணப்பட்டது. அந்த துண்டு சீட்டு மற்றும் தாள் குறித்து திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் விளக்கம் கேட்டபோது அந்த துண்டுசீட்டு மற்றும் தாள் எப்படி தனது கைப்பையில் வந்தது என்று தெரியாது என தெரிவித்ததால் அந்த துண்டுச்சீட்டு மற்றும் தாள் விசாரணைக்காக நான் கைப்பற்றினேன். பிறகு மேற்படி திரு. தனசேகரன் அவர்களிடம் உள்ள பணத்தை எண்ணி பார்த்தபோது அதில் இரண்டு பண்டல்கள் மற்றும் ஆறு கத்தைகளாக மொத்தம் ரூ.12,09,000/- இருந்தது. அதில் ஒரு பண்டலில் ரூ.5,00,000/- (500 X 1000), மற்றொரு பண்டலில் ரூ.5,00,000/- (500 X 1000), ஒரு கத்தையில் ரூ.50,000/- (500 X 100) மற்றொரு கத்தையில் ரூ.50,000/- (500 X 100), மற்றொரு கத்தையில் ரூ.50,000/-/ (500 X 100), மேலும் ஒரு கத்தையில் ரூ.15,000/- (500 X 30), மற்றொரு கத்தையில் ரூ.29,000/- (500 X 58) மேலும் ஒரு கத்தையில் ரூ.15,000/- (200 X 75). மேற்படி பணத்தைபற்றி திரு.தனசேகரன் அவர்களிடம் நான் கேட்டபோது அவர் அவருக்கு புரோக்கர் கமிசனாக ரூ.1,60,000/- கிடைத்ததாகவும், ஆவண எண்.4651/2026 நேற்று 23.09.2026ம் தேதி கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய தாக்கல் செய்யப்பட்டதற்கு இடத்தை கிரையம் பெற்றவர்கள் இடத்தை விற்ற நபர்களிடம் கொடுக்க சொல்லி அவரிடம் ரூ.10,49,000/- கொடுத்த பணம் என்றும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததாலும், அதற்கு ஆவணங்கள் ஏதும் காட்டாததாலும், அந்த பணம் ரூ.12,09,000/-த்தை சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சபணம் எனக்கருதி நான் அதனை கைப்பற்றினேன். மேலும் மேற்படி பணம் வைக்கப்பட்டிருந்த அருள்மிகு ஸ்ரீ உச்சம காளியம்மன் திருக்கோவில் என்ற பெயர் சிவப்பு நிறத்தில் பொறிக்கப்பட்ட மஞ்சள் நிற

பையையும் கைப்பற்றினேன். மேற்படி சார்பதிவாளர் அலுவலகம் முழுவதுமாக சோதனையிடப்பட்டது. மேலும், நான் திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடம் சார்பதிவகத்தில் இன்றைய தினம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரித்த போது, இன்றைய தினத்தில் மொத்தம் 39 டோக்கன்கள் அவர்களுடைய அலுவலகத்தில் பதிவுக்காக போடப்பட்டதாகவும், அதில் மொத்தம் 36 ஆவணங்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டதாகவும், மேலும் ஆன்லைன் பதிவு ஆவணம் மற்றும் Pending ஆவணம் ஆகியவற்றை சேர்த்து மொத்தம் 48 ஆவணங்களின் பதிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது என்றும், அவரது அலுவலகத்தில் இன்றைய தினம் ரொக்கமாக நேரில் யாரும் பணம் ஏதும் செலுத்தவில்லை என்றும், அவரது அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பத்திர பதிவு மற்றும் இதர பதிவுகளுக்கான பணத்தை ஆன்லைனில்தான் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், இந்த திடீர் இணை ஆய்வின் போது விசாரணைக்காக கேட்டுக்கொண்டதன் பேரில், பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி அவர்கள், (1) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக வருகை பதிவேடு (பக்கம் 01 முதல் 10 வரை), (2) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக தாமத வருகை பதிவேடு (பக்கம் 01 முதல் 09 வரை), (3) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக தணிக்கை பதிவேடு (பக்கம் 01 முதல் 15 வரை), (4) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக இயக்க பதிவேடு (பக்கம் 01 பக்கம்), (5) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக தற்செயல்விடுப்பு பதிவேடு (பக்கம் பதிவுஇல்லை), (6) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 01 முதல் 16 வரை), (7) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக ரேகை பதிவேடு (பக்கம் 01 முதல் 120 வரை), (8) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான அலுவலக வாபஸ் பதிவேடு (பக்கம் 01 முதல் 170 வரை), (9) 23.09.2026 அன்று கள்ளிக்குடி சார்பதிவகத்தில் பத்திர பதிவு செய்வதற்கு டோக்கன் பதிவு செய்த ஆன்லைன் பட்டியல் விபரம் (பக்கம் 01 பக்கம்), (10) 23.09.2026 அன்று கள்ளிக்குடி சார்பதிவகத்தில் பத்திர பதிவு செய்த ஆன்லைன் பட்டியல் விபரம் (பக்கம் 01 முதல் 03 வரை), (11) கள்ளிக்குடி சார்பதிவக ஆவண எண்.4651/2026 நாள்: 23.09.2026ன் சான்றெப்பமிட்ட உண்மை நகல் (பக்கம் 01 முதல் 41 வரை), (12) கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தின் 2026ஆம் ஆண்டிற்கான குறுந்தகடு பதிவேடு (பக்கம் 01 முதல் 07 வரை) ஆகிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சம்பந்தப்பட்ட பக்கங்களின் நகல்கள் மற்றும் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுத்து ஆவணங்கள் ஆகியவற்றை என்னிடம் ஆஜர் செய்தார். அவை அனைத்தையும் நான் விசாரணைக்காக

கைப்பற்றினேன். மேலும், மேற்படி அலுவலகத்தில் இருந்த அலுவலர்களான உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.ராஜேஸ்வரி, IP Camera Operator திரு.வீரமணி, முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.சிவபெருமாள் மற்றும் ஆவண எழுத்தரின் உதவியாளர் திரு.தனசேகரன் ஆகியோரிடம் நான் தனித்தனியாக விசாரணை செய்து அவர்களது கைப்பேசி ஆய்வு செய்யப்பட்டு, பின்னர் அவர்களது எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்களை பெற்றேன். மேற்சொன்ன பதிவேடுகள், ஆவணங்களின் சம்பந்தப்பட்ட பக்கங்களின் நகல்கள், திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு எழுதப்பட்ட தாள், ஒரு எழுதப்பட்ட துண்டு சீட்டு மற்றும் திடீர் இணை ஆய்வின் போது, தகுந்த முகாந்திரம் கூறாமல் சந்தேகப்படும்படி வைத்திருந்த மொத்தப் பணம் ரூ.13,88,710/-ம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமை களுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இந்த திடீர் இணை ஆய்வு குறிப்புரை 23.09.2026-ம் தேதி இரவு 22.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 24.09.2026-ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்குறிப்புரையின் நகல் ஒன்று திருமதி.A.ராஜேஸ்வரி அவர்களுக்கு வழங்கப்பட்டு, அதனை பெற்றுக்கொண்டமைக்கான அவரது ஒப்பம் பெறப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், பதிவு செய்யப்பட்ட எழுத்துபூர்வமான வாக்குமூலங்கள் மற்றும் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட தொகை மொத்தம் ரூ.13,88,710/- ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும், வருவாய் ஆய்வாளர் திரு. சிவபெருமாள் அவர்கள் மேற்படி காரில் இருந்தது சந்தேகம் அளிக்கும் வகையிலும், மாவட்ட நில எடுப்பு பிரிவில் பணியாற்றும் அரசு ஊழியர் சார் பதிவாளர் மற்றும் நில புரோக்கர் உடன் இரவு 22.20 மணியளவில் இருப்பது ஏற்புடையதாக இல்லாததாலும், மேலும், காரில் கைப்பற்றப்பட்ட பணத்திற்கும் திரு.சிவபெருமாள் அவர்களுக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கும் எனக்கருதியும், மேலும், மதுரை மாவட்டம் கள்ளிக்குடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் வாக்குமூலங்களின் படி எவ்வித முகாந்திரமுமின்றி பணத்துடன் இருந்ததற்கும், மேற்படி பணத்திற்கும் தகுந்த முகாந்திரமும் தெரிவிக்காததாலும், பணபரிவர்த்தனை அலுவலகத்திற்குள் மேற்கொள்ளக் கூடாது என்றும் முறையாக ஆன்லைன் மூலமாக மட்டும் மேற்கொள்ள வேண்டும் என்ற அரசு விதிமுறைகளை மீறி தங்களது சுய லாபத்திற்கு பணப்பலன் பெற இருந்தமைக்கும், கணக்கில் வராத பணம் வைத்திருந்த நபர்களான (1) திருமதி. A.ராஜேஸ்வரி, உதவியாளர், (பொறுப்பு) சார்பதிவாளர், கள்ளிக்குடி சார்பதிவகம், மதுரை (தெற்கு), மதுரை மாவட்டம், (2) திரு. R. தனசேகரன், ஆவண எழுத்தர் உதவியாளர், வேதா அஸோசியட்ஸ், ரயில்வே பீடர் ரோடு, கள்ளிக்குடி, மதுரை மாவட்டம். (தனி

நபர்), (3) திரு. P. சிவபெருமாள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் (நில எடுப்பு), சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், மதுரை மாவட்டம் ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆவண செய்யுமாறு தங்களிடம் ஒப்படைகிறேன். Sd/-XXXXXX (R.வீரசெழியன்) ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை (24.09.2026) இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 23.09.2026 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.13,88,710/- 3) கல்லிபுடி சார் பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 12 ஆவணங்கள் 4) திருமதி.ராஜேஸ்வரி அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு எழுதப்பட்ட தாள், ஒரு எழுதப்பட்ட துண்டு சீட்டு. 5) திருமதி. A.ராஜேஸ்வரி, உதவியாளர், திரு.சிவபெருமாள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தனிநபர்கள் திரு. வீரமணி மற்றும் திரு.தனசேகரன் ஆகியோரது வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (24-09-2026) at 15.30 hrs along with Joint Surprise Check Proceedings, dated 23-09-2026, Cash Rs. 13,88,710/-, Four statements and Seized 12 documents & 1 Hand Written Paper & 1 Hand Written Paper Slip. After obtaining permission from the Superior Officers, I Registered a case in Madurai V&AC Crime No.15/2026 u/s 7, 7A of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018 on 24.09.2026 at 16.30 hrs. Sd/- XXXXX 24.09.2026 [N.Bharathipriya] Inspector, V&AC, Madurai.

The original FIR along with report dated : 24.09.2026 of Tr.R.Veerachelian, Joint Surprise Check Proceedings Dated: 23.09.2026, Statements of officials (2), Statements of Private Individuals (2) are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases Under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

24-9-26

(N. BHARATHIPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Madurai
(24.09.2026)